Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# ஆண்டாளின் பக்திநெறி

முனைவர் கா. கண்ணகி & முனைவர் கோ.ப. நல்லசிவம்,
மெய்யியல்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்– 613010.
மின்னஞ்சல் – kuzhali1408@gmail.com; gpnsivam@gmail.com;

51

**ஆய்வுச்சுருக்கம்**

பன்னிரு ஆழ்வார்களுள் ஒரே பெண் ஆழ்வார் ஆண்டாள். திருப்பாவையில் பாவை நோன்பையும், நாச்சியார் திருமொழியில் அரங்கனுக்கு ஆட்பட்ட நிலையையும் அழகுத்தமிழால் புலப்படுத்துகின்றார். அவளின் திருமணம் பற்றிய பாசுரங்கள் பக்திக் காதலைப் பறை சாற்றுவதோடு ஆயர்ப்பாடிக்கே நம்மை அழைத்துச் செல்கின்றன. ஆண்டாள் அரங்கனுள் கரைய, அவள் காட்டும் மணச்சடங்கில் நாமும் அவளுக்காகக் கரைந்து போகின்றோம். மேலும் 'திருப்பாவைப் பாசுரங்களில் அழகும், தூய்மையும், ஆழ்ந்த பக்தியும், குறை காணா குறுகுறுப்பும் இருக்கும். நாச்சியார் திருமொழியிலோ' கவிதானுபவமும் கற்பனை வளமும் உச்சத்தில் இருக்கும் என்பதை நாம் அறியலாம்.

**திறவுச் சொற்கள்:** இறைவன், திருவரங்கம், பக்திநெறி, பாமாலை, பூமாலை, திருவடி, திருப்பாவை, பெண்மகவு, திருவாடிப்பூரம், மலர்கள்

**முன்னுரை**

வாழ்க்கை வெம்பாலையில் வாடி வதங்கும் மன்னுயிர்க்கு இறைவனின் திருவடி நிழலைத் தவிர வேறொரு புகலிடமில்லை. இதனைப் "புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று நம்மாழ்வார் திருவாக்கிலே காணலாம். நீரும் நிழலுமின்றித் தவிக்கும் ஆன்மா கடைத்தேற இறைவனது பாத கமலங்களே பெரிதும் உறுதுணையாகும். "உன்பாத நிழலல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் நானெங்கும் காண்கின்றிலேன்" என்கிறார் பெரியாழ்வார். அத்தகு கடலினின்றும் கரையேற இறைவன் திருவடிகளே துணையாகும் என்பதனைத் திருவள்ளுவப் பெருந்தகையார்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்

.

**பக்திநெறி**

இவர்கள் இறைவனின் கமலப் பொற்பாதங்களின் கீழ், தம் வாடாப் பாமாலைகளை வைத்து அஞ்சலி செய்துள்ளனர். அத்தகு பக்திநெறிக் கவிஞர்களுள் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதாரம் செய்தருளிய கோதை நாச்சியாராகிய ஆண்டாள் தலை சிறந்தவராவார். இவர் இறையருளால் விளைந்த ஞானத்தந்தையான பெரியாழ்வாரால் நெறிப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டவர். ஆண்டாளின் பிறப்பும், வளர்ப்பும் தனித்தன்மை வாய்ந்தவை ஆகும். அதுபோலவே அவருடைய வாக்கும், வாழ்வும் போற்றுதற்கு உரியனவாகும். இதற்கு ஆண்டாள் இயற்றிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற திவ்வியப் பிரபந்தங்களே சான்றாகும். வடமொழியின் எழுத்துக்குச் சிறிதும் இடம் தராத வகையில் அமுதத் தமிழில் எழுதப்பட்ட 'திருப்பாவை'க்கு ஆண்டாளே சூட்டியப் பெயர், சங்கத் தமிழ்மாலை. வைணவ சமயத்துக்குரிய 'திரு'வை சேர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே 'திருப்பாவை' 'நாச்சியார் திருமொழி' எனும் பெயர்கள் சூட்டப்பெற்றுள்ளன.

**ஆண்டாளின் காலம்**

"ஆண்டாளின் அவதார நாள் – நளவருடம் ஆடிமாதம் சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க்கிழமையும் கூடின பூர நட்சத்திரம் என்று குருபரம்பரை நூல்கள் சில கூறுகின்றன. இக்காலக் குறிப்பைக் கொண்டு கி.பி. 776 ஆம் வருடம் ஜீன் மாதம் 25 ஆம் தேதியே ஆண்டாள் அவதார காலம் என்று திருவாளர் சுவாமிக் கண்ணுபிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள்."[2] எது எப்படியாயினும் ஆண்டாள் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் என்பதில் ஐயமில்லை.

ஆண்டாள் அவதார காலம் அவள் இயற்றிய திருப்பாவையில் வரும் "புள்ளின் வாய் கீண்டானை" என்று தொடங்கும் பாடலின் இடையில் வரும் "வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று" என்ற சொற்றொடரை ஆராய்ச்சி செய்து அறுதியிடப்பட்டுள்ளது. 'புள்ளின் வாய் கீண்டானை' என்ற பாசுரத்தின் பொருளான "உடனொத்த கன்னியரெல்லாம் மார்கழி நீராடுதற்குரிய களத்தை அடைந்து விட்டனர். புட்களும் ஒலியெழுப்பின. இவ்வளவு நேரமாகியும், நீ இன்னும் படுக்கையிலிருந்து எழாமல் உறங்கலாமோ, பெண்ணே! துயிலெழுந்து எம்முடன் வருக"[3] என்பதாகும்.

**கோதையின் வளர்ப்பு**

ஒருநாள் மலர் கொய்யும் போது திருத்துழாய்ப் பாத்தியின் நடுவே ஒரு பெண் மகவைக் கண்டு அகமகிழ்ந்து அச்சிசுவை வாரியெடுத்து அணைத்து தம் மனையாளிடம் கொடுத்து அன்போடு வளர்த்து வரலானார். நறுமணத்துடன் முளைக்கும் திருத்துழாயினைப் போலவே

இப்பெண் மகவும் எம்பெருமானிடம் பேரன்பு கொண்டு பூங்கொடியாய் வளர்ந்து வந்தாள். ஓர் ஆடி மாதத்துப் பூர நட்சத்திரத்திலே கிடைத்தமையால் அந்நாளே திருவாடிப் பூரமே நன்னாளாயிற்று. இந்நன்னாளே 'திருவாடிப்பூரம்' என்றழைக்கப்படும்.

"மிதிலா நகரத்து அரசனான சனகன் வேள்வி செய்ய எண்ணி, நிலத்தை உழுதபோது ஏர்ப்படைச்சாலில் சீதை கிடைத்ததைப் போலவே, இப்பெரியாழ்வாருக்கும் மகப்பேறில்லாக் குறை நீங்க ஆண்டாளாகிய இப்பெண் மகவு திருத்துழாய்ப் பாத்தியிலே கிடைத்தாள். திருவாடிப்பூரம்; எமக்காகவன்றோ ஆண்டாள் இங்கு அவதரித்தாள் என்று வைணவ ஆசாரியரான ஸ்ரீமணவாள மாமுனிகள் கொண்டாடிப் பாராட்டினார்."[4] நாளடைவிலே விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வார் வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்தும் பூமாலைக்குரிய மலர்களை அளிக்கும் திருநந்தவன நிலத்தில் அவதரித்த காரணத்தினாலோ; தமிழணங்கின் தாழ்குழலில் சூடுதற்குரிய பூமாலை போன்ற பாமாலைகளைப் பாடித்தரப் போகின்றாள் என்பதனை முன்கூட்டி உணர்ந்ததாலோ, அப்பொற்பாவைக்குக் 'கோதை' என்று தாமே பெயரிட்டழைத்தார்.

தந்தையாகிய பெரியாழ்வார் பகவானுக்கு பூமாலை கட்டும் பொழுதெல்லாம், தன்னருமைச் செல்வியை அருகில் அழைத்து அவளுக்குக் கண்ணன் கதைகளையெல்லாம் நெஞ்சிற் பதியும் வண்ணம் அழகாகக் கூறி வந்ததால் மலர்களில் மணமும், தேனும் ஒருங்கமைந்து நிற்றல் போல கோதை நாச்சியாரிடம் மெய்ஞ்ஞானமும், பாம்பணைப் பள்ளியானிடம் பேரன்பும் ஒருங்கமைந்து சிறந்து விளங்கின.. கிருஷ்ணலீலைகளைச் செவிமடுத்து மகிழ்ந்த ஆண்டாளும் கண்ணபிரானிடம் அளவிறந்து மேலோங்க அதுவே பக்தி மிகுந்த காதலாகப் பரிணமித்தது. கண்ணனைக் காண வேண்டும், அவனுடன் பேச வேண்டும், கட்டியணைத்திட வேண்டும் என்றெல்லாம் எண்ணலானாள். அவ்வெண்ணம் மேன்மேல் பெருகி வளர்ந்து உள்ளத்தில் ஆசைக்கனலை மூட்டிவிட்டது. ஒருசமயம் கோதை மலர் கொய்து வரத் தந்தையாருடன் நந்தவனம் சென்றபோது.

அங்கோர் கொழு கொம்பைச் சுற்றிப் படர்ந்திருந்த கொடியினைக் கண்டாள். சில நாட்களுக்கு முன் அதே கொடி, பற்றேதுமின்றி தரையிலே படர்ந்திருந்ததை நினைவு கூர்ந்தாள். சில தினங்களிலே ஏற்பட்டிருந்த இம்மாற்றத்தை உணர்ந்த கோதை, இது போல் யானும் பற்றிநின்று படரும்படியான என் கண்ணன் எனக்குக் கிடைப்பானா என்ற ஏக்கம் அவளுக்குப் பிறந்தது. அதனால் **"என்றுகொலோ என் கண்ணனைக் கண் குளிரக் காணும் நாள்"**[5] என்று அரற்றலானாள். தோட்டத்தில் காயா மலர்களைக் காணும் போதெல்லாம் 'மாயனே வந்தருளாய்' என்று கூப்பிடுவாள். விண்ணில் கருநிற மேகங்களைக் கண்டவுடன் கண்ணன் நினைவு வர தன் வண்ணம் மாறித் தவிக்கலானாள். பொய்கைகளில் செந்தாமரை மலர்களைக்

கண்டபோதெல்லாம் 'இம்மலர்கள் கண்ணனுடைய கண்களைக் காட்டி என்னை மயக்குகின்றனவே' என்று கூறித் தளர்வாளாயினாள்.

**பாவை நோன்பு**

கதிரவன் முகம் காட்டுவதற்று முன்புள்ள பரவச நேரமே, கண்ணதாசன் கூறுவது போல, விடிந்தும் விடியாத காலைப் பொழுது. ஒவ்வொருவரின் உயிராற்றல் பெருக்கத்துக்கும் உகந்த நேரமாகும் அது தியானமாகவோ, யோகமாகவோ, மூச்சுப் பயிற்சியாகவோ, சாதகப் பயிற்சியாகவோ இருக்கலாம். மனிதர்களின் கணக்கில் 'ஓராண்டு' என்பது தேவர்களின் கணக்கில் 'ஒரு நாள்' என்பது ஜோதிடத்தின் கணிப்பாகும். அதன் பிரகாரம் தை முதல் ஆனி வரையிலான ஆறு திங்களும் 'உத்தராயணப் புண்ணிய காலம், அதாவது சூரியயோதயமும், 'ஒரு பகல் பொழுதும் ஆகும். ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறு திங்களும் 'தட்சிணாயணம்' அதாவது இரவுப் பொழுது, இதன்படி அவர்களுக்கு மார்கழி மாதம் முழுவதும் "பிரம்ம முகூர்த்தம்" எனப்படும் விடியற்காலை ஆகும். பிரம்ம முகூர்த்தத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு சிறுபணி கூடப் பெரிதும் சிறக்கும் என்பர்.

மாதங்களில் அவள் மார்கழி – கண்ணதாசன்
மாதங்களில் நான் மார்கழி – கண்ணன்

'பாவை' என்ற சொல்லுக்கு, பெண், கண்ணின் பாவை, பதுமை, சித்திரம் என்று பல பொருள்கள் உள்ளன. பாவைப்பதுமை ஏந்திய விளக்கு 'பாவை விளக்கு' ஆற்றங்கரைகளிலோ, குளத்தின் கரைகளிலோ மணலில் 'பதுமை" பிடித்து, மழை வேண்டிப் பாடும் பாட்டே 'பாவைப்பாட்டு' நாடு செழிக்க வேண்டும், நல்ல மழை பொழிய வேண்டும், நல்வாழ்வு வாழ வேண்டும், நல்ல கணவன் நாடிவர வேண்டும் என்பதே 'பாவைப்பாட்டின் நோக்கமாகும். அவை கீழ்வானம் வெளுப்பதும், கோழி கூவுவதும், பறவைகள் ஒலிப்பதும், முனிவர்களும், யோகிகளும் துயிலெழுந்து அரியின் பெயரை முழங்குவதும் போன்றனவாகும். இவை நிகழ்வதற்கு முன்பே விரத நியமத்தை முடிக்க வேண்டி, மகளிர் விரைதல் கூறப்படுதலின் பொழுது விடியுமுன்பே ஆயர்ப்பாடிப் பெண்டிர் நீராட்டம் செய்தார்கள் என்று அறிய முடிகிறது.

**மணவினையும் ஊழ்வினையும்**

ஆண்டாளுக்கு பருவவயது வந்ததும், திருமணம் செய்து வைக்க பெரியாழ்வார் நினைத்தார். அவர் தம் எண்ணத்தை ஆண்டாளிடம் கூறியபோது அவள் பெரியாழ்வாரிடம் 'அப்பா! தாங்கள் நினைப்பது போல் ஒருவன் எவ்வளவுதான் ஞானபக்தி வைராக்கியங்களில் தலைசிறந்தவன் ஆனாலும், மானுடன் ஒருவனுக்கு மாலையிட என் மனம் விரும்பாது. அந்தணர் செய்யும் வேள்வியாகிய யாகத்தில் தேவர்களுக்கு இடப்படும் அவியுணவை ஒரு காட்டு நரி புகுந்து, முகந்து உண்ணத் தலைப்பட்டால், அது எவ்வளவு கொடுமையோ, அவ்வளவு கொடுமை

அப்பா என்னை ஓர் உலகியல் மானிடன் தொட விரும்புவது, எனது அங்கங்களும், அழகும் அப்பரம்பொருளாகிய கண்ணனுக்கே உரியனவாகும்" என்று தம் உள்ளக் கிடக்கையை உள்ளது உள்ளவாறு வெளிப்படையாகவே கூறி விடுகிறாள். இதனை,

"ஊனிடையாழி சங்கு உத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த என் தடமுலைகள்

மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய்" 6

கோதைப்பிராட்டியின் மனம், திருவரங்கன் திருவருளையே நோக்கி நின்றது. உணவுண்ண மறந்தாள். உறக்கமும் நீங்கினாள்; கண்களில் நீர்பெருக அக்கண்ணனையே நினைந்து நினைந்து உருகினாள். இத்துன்பக் கடலினின்றும் கரையேற அந்த வைகுந்தனாகிய தோணியைப் பெறவேண்டும் என்று முயன்று நோன்பு நோற்றாள் ஆண்டாள். இதனை,

"என்புருகி இனவேல் நெடுங்கண்கள் இமை பொருந்தா பல நாளும்

துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெறாதுழல்கின்றேன்'' 7

என்று ஆண்டாளின் அற்புதமான வாக்கினால் உணரலாம். மேலும் அக்கால வழக்கப்படி, தான் விரும்பிய நாயகன் தன்னை வந்தடைவானா, மாட்டானா என்று அறிய கூடலிழைத்துப் பார்ப்பதற்கும் தயாரானாள்.

"பூம கன்புகழ் வானவர் போற்றுதற்கு காம கன்அணி வாணுதல் தேவகி

மாம கன்மிகு சீர்வசு தேவர்தம் கோம கன்வரில் கூடிடு கூடலே!" 8

மண்ணின் பாரம் நீக்குதற்கே வசுதேவர்க்கும், தேவகிக்கும் புதல்வனாய்த் அவதரித்த கண்ணன் என் துயர் தீர இங்கே வருவானா, மாட்டானா காளியன் மேல் நடமாடிய கண்ணன் வருவானா மாட்டானா என்று அறிய, கூடலிழைத்தாள் கோதை.

"ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிடப் பூத்தநீள் கடம்பேறிப் புகப் பாய்ந்து

வாய்த்த காளியன்மேல் நடமாடிய கூத்தனார் வரில் கூடிடு கூடலே"' 9

இவ்விதமாக எப்பொழுதும் இறைவன்மேல் பித்தேறிய நிலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, கண்ணீர் மல்கி நிற்கும் தம் மகளைக் கண்டு பெரியாழ்வாரும் கலங்கினார். இப்பெண்ணை எப்படித் தேற்றுவது என்று சிந்தித்தார். ஏதேனும் இறைவனின் குணங்கள் நிறைந்த கதைகளைச் சொல்லித்தேற்ற நினைத்தார். அவள் விரும்பும் கதைளைச் சொன்னார் பெரியாழ்வார். பெண்ணே, கோதாய், பக்தி நெறி நிற்பார்க்கு பகவத் குணங்களை, அவன் வரலாறுகளைக் கேட்பதில் பெருவிருப்பம் உண்டு. உனக்கும், அவ்விருப்பம் மிகுதியாக உண்டு என்பதும் அறிவேன்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எம்பெருமானுடைய வைபவத்தில் உனக்கு விருப்பமானது ஒன்றையே நீயே குறிப்பிட்டால் அதை நான் விரிவாக உனக்குச் சொல்வேன். நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலையிராமன் தோள்வலி கேட்கின்றாயா அல்லது ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கத்தின் சரிதம் கேட்க விருப்பமா என்று வினவினார். அதற்குக் கோதை "எந்தாய் என்மனம் எம்பெருமான் உறைகின்ற அனைத்துத் தலங்களினுடைய பெருமைகளையும் கேட்கவே விரும்புகின்றது என்றாள்."[10]

"ஆண்டாள், தந்தையே, தாங்கள் கூறியதிலிருந்து கோயில் எனப்படும் திருவரங்கமே தலையாய திவ்விய தேசம் என உணர்ந்தேன். அத்திருவரங்கத்து எம்பெருமானைப் பற்றியே சொல்லுங்களேன்"[11] என்றாள்.

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு,
உடல்எனக்கு உருகுமாலோ என்செய்கேன் உலகத்தீலரே" 12"
"[12]

என்று உள்ளத்தையும், உடலையும் உருக்கவல்ல பெரிய பெருமாளாம் திருவரங்கன் பெருமையினையும், தெண்ணீர்ப் பொன்னித் திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொண்டிருக்கும் பாங்கினையும், அவனுடைய பெரியவாய், திருக்கண்கள், கண்டாரை பேதலிக்கச் செய்யும் பேற்றியன என்பதையும் சொல்லிப் பரவசமுற்றார். அரங்க நகரப்பன் வைபவங்களைக் கேட்ட ஆண்டாளுடைய கண்கள் பனித்தன. திருவரங்கத்திற்கே செல்லவும், அவனையே நாயகனாக அடையவும் வேண்டும் என்று உறுதி கொண்டாள்.

**தொகுப்புரை**

ஆண்டாள் கண்ணன் மீது கொண்ட காதல் பாவைப்பாடல், தூது போன்ற இலக்கிய வகைகளையும் கனவுக்காட்சிகளையும் தந்துள்ளது. ஆண்டாள் அருளிய இரண்டு பிரபந்தங்களும் அகத்துறை சார்ந்தவைகளாவே உள்ளன. ஆண்டாளின் பாடல்களில் உண்மைக் காதலையே காண்கின்றோம். மானுடப்பெண் தன்னோடு ஒத்த ஒரு மானுடனைக் காதலிக்கும் பண்டைய அகமும், ஒரு சாதாரணப் பெண் தன்னோடு ஒவ்வாத மனிதனான அரசனைக் காதலிக்கும் முத்தொள்ளாயிரம் அகமும், மானிடப் பிறவி பிறந்தும் மாயவனைக் காதலிக்கும் ஆண்டாளின் இறைக்காதலும் தலைவனைப்பற்றிய அடிப்படையில் பெரிதும் மாறுபடுவதை அறியலாம்.

**மேற்கோள்கள்**

1. ஆர். பொன்னம்மாள், குறள்-10
2. மணவாளன் கே.ஏ, ஆண்டாள், ப-11
3. மேலது ப-14
4. நரேன் இளவேனில், ஆண்டாள் ப-12
5. மேலது ப-13
6. பெருமாள் திருமொழி பா-10.1
7. எதிராஜன் ஆ, ஆழ்வார்கள் வரலாறு. ப-182
8. நா.தி பா-508-1.5
9. மேலது பா-548-5.4
10. மேலது பா-536-4.3
11. மேலது பா-537-4.4
12. மணவாளன் கே.ஏ, ஆண்டாள் ப-30

**துணைநூற்பட்டியல்**

1. பொன்னம்மாள், ஆர். திருக்குறள் தெளிவுரை, அன்னை புத்தகாலயம், தி.நகர் சென்னை-17 முதற்பதிப்பு ஏப்ரல் 2001
2. அருணாசலம், பக்தி இலக்கியம், சென்னை 94 முதற்பதிப்பு – 2002.
3. எதிராஜன்.ஆ, ஆழ்வார்கள் வரலாறு, ஸ்ரீவைணவ சித்தாந்தப் பதிப்பகம், முதற்பதிப்பு-1998
4. கோபாலகிருஷ்ண மாச்சாரியர்.மு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பாகம்1,2 சென்னை. பதிப்பு – 1984
5. சீனிவாசன் ம.பெ, குலசேகராழ்வார், முதல் வெளியீடு 2002, புதுதில்லி 110 001
6. நரேன் இளவேனில், ஆண்டாள், ஈஸ்வரி புத்தக நிலையம், திருவில்லிபுத்தூர் – 626 125 முதற்பதிப்பு – ஜன 2005
7. நாராயண வேலுபிள்ளை.எம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், (மூலமும் தெளிவுரையும்) முல்லை பதிப்பகம், முதற்பதிப்பு –செப் 2000
8. மணவாளன் கே.ஏ, ஆண்டாள், தமிழ்ப் பல்கலைக்கழகம், , புதுதில்லி – 110 001. தற்பதிப்பு 1990